DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TIRUCHENDUR

| | |
|---|---|
| Name : தாமஸ் | Father/Husband Name : தவசேசு |
| Age : 55 | Village : சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Taluk : | Calling : ஆறுமுகநேரி |
| Religion : | Caste : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd July 2026
(Accused present.)

<u>முதல் விசாரணை</u> :–

1. நான் தற்போது ஆறுமுகநேரி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். அந்த காவல் நிலையத்தில் பணியாற்றிய உதவி ஆய்வாளர் சுந்தரமூர்த்தி என்பவரையும், அவருடைய கையெழுத்தும் எனக்கு தெரியும். அவர் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து என்னால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க முடியும்.

2. கடந்த 04.04.2019ம் தேதி பிற்பகல் 1.30 மணிக்கு நிலைய பொறுப்பில் காவல் நிசாரூதின் நிலைய பொறுப்பிலிருநத போது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று சி.எஸ்ஆர். எண். 155/2019 என்று வழங்கி, நிலுவையில் இருந்ததை 10.04.2019ம் தேதி 14.00 மணிக்கு உதவி ஆய்வாளர் சுந்தரமூர்த்தி விசாரணைக்கு எடுத்து கொண்டு மேற்படி புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 100/2019 இ.த.ச பிரிவுகள் 294(பி), 427, 506(2)ன் கீழான குற்றங்களுக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **(சி.எஸ்.ஆர் மனு அ.சா.ஆ. 3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

3. வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்ட உதவி ஆய்வாளர் சுந்தரமூர்த்தி 10.04.2019 ம் தேதி 15.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முகமது அக்தர், செய்யது சுலைமான் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு பார்வைமகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்தார். **(பார்வைமகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரிவரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் சம்பவ இடத்தில் அன்றைய தினமே **15.30** மணிக்கு உடைந்த நிலையில் இருந்த கார் கண்ணாடி துண்டுகள் சிறிதளவு மற்றும் உடைந்த நிலையில் இருந்த பாதி செங்கல் துண்டு ஒன்றை மேற்படி பார்வைமகஜர் சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து படிவம் **91**ல் முறைப்படுத்தி நீதிமன்ற காவலுக்குட்படுத்தினார்.

**(அத்தாட்சி அ.சா.ஆ. 7 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ. 8 ஆகவும், உடைந்த நிலையில் இருந்த கார் கண்ணாடி துண்டுகள் சிறிதளவு மற்றும் உடைந்த நிலையில் இருந்த பாதி செங்கல் துண்டு அ.சா.பொ. 1 மற்றும் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அவர்கள் இருவரையும் விசாரணை செய்து அவர்களின் வாக்குமூலத்தை பதிவு செய்தார்.

4. சாட்சிகள் பைசல் ரகுமான், செய்யதலி பாத்திமா, பீர் முகமது, குத்புதீன், காவலர் நிசாரூதின் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

5. எதிரியை தேடிவந்த நிலையில் 10.04.2019 ம் தேதி மாலை 6.00 மணிக்கு ஆறுமுகநேரி காமராஜ் பூங்கா முன்பு எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்குட்படுத்தியுள்ளார்.

6. அவருடைய விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் வழக்கு சம்பவம் உண்மையென தெரிய வந்ததால் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 427, 506(2)ன் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

7. பொய்யான புகார் வாக்குமூலம் பெற்று, எதிரிக்கு எதிராக இந்த வழக்கு பொய்யாக பதிவு செய்யயப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்காவணங்கள் அனைத்தும் எதிரிக்கு எதிராக காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் எவ்விதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Sd. Tr. M. V O Chidambaram,
Judicial Magistrate, Tiruchendur.

True Copy/AS